## பெப்ரவரி– 27 – செவ்வாய்

**புனித வியாகுல அன்னையின் கபிரியேல் தூதர்**

**நன்றிப்பலி செலுத்துவோர் என்னை மேன்மைப்படுத்துவர். திபா. 50:23**

### முதல் வாசகம் : ஏசாயா 1 : 10, 16 – 20

எருசலேமே, உன்னை ஆளுகிறவர்களும் உன் மக்களும், சோதோம் கொமோராவைப் போன்றவர்களாயிருக்கின்றனர் நம் ஆண்டவரின் அறிவுரையைக் கேளுங்கள் அவர்தம் கட்டளைக்குச் செவிசாயுங்கள். உங்களைக் கழுவித் தூய்மைப்படுத்துங்கள் உங்கள் தீச்செயலை என் திருமுன்னிருந்து அகற்றுங்கள் தீமை செய்தலை விட்டொழியுங்கள். நன்மை செய்யக் கற்றுக் கொள்ளுங்கள் நீதியை நாடித் தேடுங்கள் ஒடுக்கப்பட்டோருக்கு உதவி செய்யுங்கள் திக்கற்றோருக்கு நீதி வழங்குங்கள் கைம் பெண்ணுக்காக வழக்காடுங்கள். ”வாருங்கள், இப்பொழுது நாம் வழக்காடுவோம்” என்கிறார் ஆண்டவர் ”உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன் எனினும் உறைந்த பனிபோல அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன் எனினும் பஞ்சைப்போல் அவை வெண்மையாகும்.மனமுவந்து நீங்கள் எனக்கு இணங்கி நடந்தால் நாட்டின் நற்கனிகளை உண்பீர்கள்.மாறாக, இணங்க மறுத்து எனக்கெதிராகக் கிளர்ந்தெழுந்தால், திண்ணமாய் வாளுக்கு இரையாவீர்கள் ஏனெனில் ஆண்டவர்தாமே இதைக் கூறினார்.

**பதில்பாடல் :** தம் வழியைச் செம்மைப்படுத்வோர் கடவுளின் மீட்பைக் கண்டடைவர்

### நற்செய்தி : மத்தேயு 23 : 1 – 12

அக்காலத்தில் இயேசு மக்கள் கூட்டத்தையும் தம் சீடரையும் பார்த்துக் கூறியது. ”மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர்.ஆகவே அவர்கள் என்னென்ன செய்யும்படி உங்களிடம் கூறுகிறார்களோ அவற்றையெல்லாம் கடைப்பிடித்து நடந்து வாருங்கள். ஆனால் அவர்கள் செய்வதுபோல நீங்கள் செய்யாதீர்கள். ஏனெனில் அவர்கள் சொல்வார்கள் செயலில் காட்ட மாட்டார்கள். சுமத்தற்கரிய பளுவான சுமைகளைக் கட்டி மக்களின் தோளில் அவர்கள் வைக்கிறார்கள் ஆனால் அவர்கள் தங்கள் விரலால் தொட்டு அசைக்கக் கூட முன்வரமாட்டார்கள்.தாங்கள் செய்வதெல்லாம் மக்கள் பார்க்க வேண்டும் என்றே அவர்கள் செய்கிறார்கள் தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகிறார்கள் அங்கியின் குஞ்சங்களைப் பெரிதாக்குகிறார்கள். விருந்துகளில் முதன்மையான இடங்களையும் தொழுகைக் கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகின்றார்கள்சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும் ரபி என அழைப்பதையும் விரும்புகிறார்கள். ஆனால் நீங்கள் ”ரபி” என அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் உங்களுக்குப் போதகர் ஒருவரே. நீங்கள் யாவரும் சகோதரர், சகோதரிகள்.இம்மண்ணுலகில் உள்ள எவரையும் தந்தை என நீங்கள் அழைக்க வேண்டாம். ஏனெனில் உங்கள் தந்தை ஒருவரே. அவர் விண்ணகத்தில் இருக்கிறார். நீங்கள் ஆசிரியர் எனவும் அழைக்கப்பட வேண்டாம். ஏனெனில் கிறிஸ்துஒருவரே உங்கள் ஆசிரியர்.உங்களுள் பெரியவர் உங்களுக்குத் தொண்டராக இருக்க வேண்டும்.தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்‘ என்றார்.

**தியானம் :** ஆண்டவர் இயேசு “தம்மைத்தாமே உயர்த்துவோர் எவரும் தாழ்த்தப ்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப் பெறுவர்” என அறைகூவல் விடுக்கின்றார். இவ்வுலகில் முதன்மையானவை மாயக்கவர்ச்சியும், பாவச்சூழ்ச்சியும், பொய்யை மெய்யாக்கி மெய்யைப் பொய்யாக்கும் ஏதேன் தோட்டத்து தந்திரச்செயல்கள் நிறைந்தவையாகவே அமைந்திருக்கின்றன. கணனி யுகம் கணக்கற்ற பலவித மாயக்கவர்ச்சிகளால் எம்மை இறைமகன் இயேசுவிடமிருந்தும் அவரது புதுவாழ்விலிருந்தும் பிரித்துவிட முயற்சிக்கின்றது. இன்று பலர் எத்தனையோ தப்பான படிப்பினைகளால் எப்படியும் வாழலாம் என ஏமாந்து வாழ்கின்றனர். பிளவு, பிரிவினை, திருமண முறிவுகள், கொலைகள், தற்கொலைகள், குழப்பங்கள் தலைதூக்கியுள்ளன. விசுவாசத்தோடு வாழமுடியாது அன்றாட வாழ்வில் தடுமாற்றங்களை, இடறல்களை சந்திக்கிறோம். இப்படிப்பட்ட சோதனையில் இறைமகன் இயேசு சரியானதையும், தமக்குப் பிடித்தமானதையும் தேர்ந்து எடுக்கவே எம்மை அழைக்கின்றார். எமக்கு ஆண்டவர் இயேசுவுடனான நெருக்கமான, அந்நியோன்னிய உறவு அவசியம். ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் நித்திய வாழ்வளிக்கும் திரு உணவுப்பந்தியில் தகுதியுள்ளவர்களாக பங்கேற்காவிடில் அவருக்கு உகந்த பணிவுள்ளவச்களாக வாழ முடியாது. ஆண்டவர் இயேசுவின் அரவணைப்பும், ஆதரவுமின்றி நாம் செயற்படமுடியாது. எம்மில் கிறிஸ்து வாழாவிடில் இவ்வுலகில் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொண்டு நாம் வாழமுடியாது. கிறிஸ்துவுக்கு மறுசாட்சிகளாக வாழுவது மிகச்சுலபம். ஆனால் கிறிஸ்துவுக்குச் சாட்சிகளாக வாழுவது மிகமிகக் கடினம். கிறிஸ்தவம் என்பது வெறும் போதனையல்ல அது வாழ்ந்து காட்டுவதாகும். இவ்வுலகில் நாம் வெறுமனே உயிர்வாழ அழைக்கப்படவில்லை. மாறாக தமது சீடர்களது பாதங்களை கழுவிய இறைமகன் இயேசுவின் பணிவான வாழ்வு வாழவே நாம் படைக்கப்பட்டோம். ஆதலால் எம்மைப் படைத்தவர் பின்னே நாம் பணிவோடு சென்றால் அது கடைசி இடமாயினும் இறைமகன் இயேசுவின் பார்வையில் முதன்மையான பேரின்ப வாழ்வாக மாற்றப்படும். அப்படிப்பட்ட வாழ்க்கையை ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து எம்மிடம் எதிர்பார்க்கின்றார். “இளகாத மனம் செய்தல் பணியில்லை. இரங்காத இதயத்தில் இறையில்லை” என்ற பாடல் வரிகள் கூறுவது போன்று அழைப்பவர் அவர் பின்னே பணிவோடு எம்மைத் தாழ்த்தி எமது சிலுவையைச் சுமந்து வாழ்ந்து காட்டுவோமா?